# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

**மனு எண். 226/நகராட்சி/2018**
**நாள் : 23/05/2019**

**ஸ்கைபார்க் அடுக்கக மனை**
**உரிமையாளர்கள் சங்கம்,**
**குரோம்பேட்டை, சென்னை – 600 044.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**சென்னை – 600 044.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, பல்லவபுரம், துரைப்பாக்கம் 200 அடி சாலையில் அமைந்துள்ள ஸ்கைபார்க் அடுக்ககத்தின், அடுக்கக மனை உரிமையாளர்கள் சங்கப் பொறுப்பாளர்களின் 02.11.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 226/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக அடுக்கக மனை உரிமையாளர்கள் சங்க பொறுப்பாளர்கள், நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டும் நகராட்சி ஆணையர் மற்றும் செங்கல்பட்டு மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் ஆகியோரின் அறிக்கைகள் பெறப்பட்டும் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

சென்னை, பல்லவபுரம், துரைப்பாக்கம் 200 அடி சாலையில் அமைந்துள்ள ஸ்கைபார்க் அடுக்ககத்தின், அடுக்கக மனை உரிமையாளர்கள் சங்கப் பொறுப்பாளர்கள் கீழ்க்காணும் விவரங்களைத் தெரிவித்து தங்களது ஸ்கைபார்க் அடுக்ககத்திற்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளனர்.

1. 207 அடுக்கக மனைகள் கொண்ட ஸ்கைபார்க் அடுக்ககத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான வைப்புத் தொகை ரூ. 20.70 லட்சம் 2012–ஆம் ஆண்டிலேயே நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளதென்றும் ;
2. மேற்குறிப்பிட்ட அடுக்ககத்தில் தற்பொழுது குடியிருக்கும் 73 அடுக்கக மனை உரிமையாளர்கள் பாதாளச் சாக்கடை இணைப்பிற்கு ரூ. 510/– கட்டணம் செலுத்தி 2018–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நகராட்சிக்கு விண்ணப்பித்தது ;
3. பாதாள சாக்கடைப் பணியினை தொடங்குவதற்கு , 04.06.2018 நாளிட்ட பணி ஆணை நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது ;
4. 04.06.2018– அன்று சாலை மறு சீரமைப்புக்கான கட்டணமும் செலுத்தப் பட்டுள்ளது ;

2.ஸ்கைபார்க் அடுக்க மனை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு V. இராமகிருஷ்ணன் அவர்களிடம் 26.11.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது மேற்குறிப்பிட்ட விவரங்களை உறுதி செய்ததுடன் , பல்லவபுரம் நகராட்சிப் பகுதியில் உள்ள ஒலிம்பியா கிராண்ட்

என்ற அடுக்ககத்தின் 700 குடியிருப்பு மனைகள் உள்ளன என்றும், அவ்வடுக்ககத்திற்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கியது போல் அல்லாமல், இரவு நேரத்தில் மட்டும் கழிவு நீரை தங்களது அடுக்ககத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்வதாக நகராட்சி அலுவலர்கள் தெரிவித்தனர் என்றும் விசாரணையின் போது குறிப்பிட்டார். தங்களது அடுக்ககத்தின் கழிவு நீர் வெளியேற்றும் குழாய்கள் 200 அடி சாலையில் இருந்து 25 அடி சரிவில் உள்ளதென்றும் தெரிவித்தார். மேலும், உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையிலும் கூட கழிவு நீர் இணைப்பு வழங்கப்படாமல் நகராட்சி அலுவலர்கள் தாமதப்படுத்துகின்றனர் என்றும் விசாரணையின் போது குறிப்பிட்டார்.

3. மேற்குறிப்பிட்ட அடுக்ககத்திற்கு கழிவு நீர் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. இவ்வடுக்ககத்திற்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்க நேராய்வு செய்யப்பட்டதில், கட்டடத்தின் பின்பகுதியில் இணைப்பு வழங்கும் வகையில் முடிவு செய்யப்பட்டு குழாயின் விட்டம் மற்றும் தள அளவு (Level) சரி பார்க்கப்பட்டதில் பின்பகுதியில் பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்க சாத்தியக் கூறு இல்லாத நிலை கண்டறியப்பட்டது என்றும், குழாயின் விட்டம் சிறியதாக உள்ளதால், இக்கட்டடத்தின் பாதாளச் சாக்கடை நீர் வெளியே வரும் நிலை ஏற்பட்டு சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளதென்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே, இவற்றை கருத்தில் கொண்டு கட்டடத்தின் முன்பகுதியில் 200 அடி ரேடியல் சாலையை துண்டிப்பு செய்து எதிர்புறமுள்ள பாதாளச் சாக்கடை இணைப்பில் இணைப்பு வழங்கலாம் என்றும் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார். மேலும், இவ்வடுக்ககத்தின் பின்பகுதியில் தற்காலிக பாதாளச் சாக்கடை இணைப்பை உரிய கட்டணங்களை பெற்று தற்காலிகமாக இணைப்பு வழங்கவும், இணைப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் கட்டடத்தின் முன்பகுதியில் பதிக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடை பிரதான குழாயில், இவ்வடுக்ககத்திலிருந்து 600 மிமீட்டர் விட்டம் கொண்ட குழாய் இணைப்பு வசதியை Tranchless Technology மூலம் அடுக்கக மனை உரிமையாளர் சங்கத்தினரே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சாலை துண்டிப்பு செய்வதற்குரிய அனுமதியை நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து பெற்றுத் தரும் பணியை நகராட்சியே மேற்கொள்ளும் என்று நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார்.

4. நகராட்சி ஆணையரின் அறிக்கை குறித்து, அடுக்ககமனை உரிமையாளர்களின் சங்கத்தின் கருத்தும் கோரப்பட்டது. அதன்படி அவர்களது 19.02.2019 மற்றும் 21.02.2019 நாளிட்ட கடிதங்களில், குழாயின் விட்டம் மற்றும் தள அளவு (Level) சரி பார்க்கப்பட்டதில் சாத்தியக்கூறு இல்லை என நகராட்சி ஆணையர் கூறுவது அப்பட்டமான பொய் என்றும், தள அளவு ஏற்றவாறு சரியாக உள்ளதென்றும், எதிர்புறம் 200 அடி ரேடியல் சாலையின் உயரம் மற்றும் தள அளவு பற்றி எதுவும் நகராட்சி ஆணையர் குறிப்பிடாதது, ஒரு தவறான செயல் என்றும், 200 அடி ரேடியல் சாலை தங்களது கழிவு நீர் வெளியேற்றும் குழாயிலிருந்து குறைந்தது 15 அடி உயரத்தில் உள்ளது என்றும், இதனை நில அளவையர் அளக்கும்போது உறுதி செய்து கொண்டோம் என்று தெரிவித்துள்ளனர். மேலும், 207 குடியிருப்புமனைகள் உள்ள தங்களது அடுக்ககத்தில் 73 குடியிருப்புகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது என்றும், 46 மனைகளுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளனர். 88 அடுக்கக மனைகள் விற்கப்படாத நிலையில், தற்சமயம் நாகாத்தம்மன் கோயில் தெருவில் உள்ள பாதாளச் சாக்கடை இணைப்புடன் தங்களது அடுக்ககத்தின் கழிவு நீர் இணைப்பினை சேர்க்குமாறும் கோரியுள்ளனர். மேலும், அனைத்து குடியிருப்பு மனைகளுக்கும் சொத்துவரி ஏற்பட்டவுடன் 200 அடி சாலை வழியாக, பாதாளச் சாக்கடை இணைப்பினை வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

5. ஸ்கைபார்க் அடுக்ககத்திலிருந்து கழிவு நீர் வெளியேற்றுவது குறித்து அடுக்கக மனை உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பல்லவபுரம் நகராட்சி அலுவலர்கள் ஆகியோருக்கிடையில் முரண்பட்ட கருத்து நிலவியதால் செங்கல்பட்டு மண்டல, நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரை கள ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையிடப்பட்டது. நகராட்சிகளின் மண்டல இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் ஆகிய இருவரும் ஸ்கைபார்க் அடுக்கக மனையினை கள ஆய்வு செய்து அறிக்கையினை சமர்ப்பித்தனர். அவ்வறிக்கையில், கணபதிபுரம் பிரதான சாலை மற்றும் நாகாத்தம்மன் கோவில் தெரு சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் குழாயின் விட்டம் 200 மிமீட்டர் என்றும் இக்குழாய் மணி ஒன்றுக்கு 62 கன மீட்டர் கழிவு நீரினை வெளியேற்றும் திறன் கொண்டது என்றும், ஆனால் ஸ்கைபார்க் அடுக்கக மனையின் மொத்த மனைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவு நீர் மணி ஒன்றுக்கு 14.65 கன மீட்டர் அளவுதான் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளதால், ஸ்கைபார்க் அடுக்ககத்திற்கு பின்புறமுள்ள கணபதிபுரம் பிரதான சாலை மற்றும் நாகாத்தம்மன் கோயில் சந்திப்பு சாலையில் அமைந்துள்ள புதை சாக்கடைத் திறப்பு வாயுடன் (Man-hole) இவ்வடுக்கக கழிவு நீரினை இணைக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், குடியிருப்பு மனைகள் எத்தனை இருந்தாலும், அம்மனைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஒரே குழாய் மூலம் புதை

சாக்கடைத் திறப்பு வாயுடன் இணைக்கும் நிலை உள்ளதால் நகராட்சிக்கு ஏற்படும் செலவினத்தில் மாற்றம் இல்லை என்று தெரிவித்துள்ளார். இவ்வடுக்ககத்தில் அனைத்து மனைகளும் பயன்பாட்டுக்கு வரும் நிலையில் காலமுறையில் ஆய்வு மேற்கொண்டு (Periodical Isnpection) அம்மனைகளின் குடியிருப்புதாரர்களிடம் கழிவு நீர் கட்டணத்தை வசூலித்துக் கொள்ளலாம் என்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. எனவே, செங்கல்பட்டு மண்டல, நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ள அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. மனுதாரர்களும் இதையே விசாரணையின் போது தங்களது கோரிக்கையாக வேண்டினர். எனவே, ஸ்கைபார்க் அடுக்கக மனையிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை கணபதிபுரம் பிரதான சாலை மற்றும் நாகாத்தம்மன் கோவில் தெரு சந்திப்பில் அமைந்துள்ள புதை சாக்கடை திறப்பு வாயுடன் இணைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினையும் 30 தினங்களுக்குள் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மே திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

28/5/19

28/5/19

பெறுநர்

1. தலைவர்,
ஸ்கைபார்க் அடுக்கக மனை உரிமையாளர்கள் சங்கம்,
200–அடி சாலை,
குரோம்பேட்டை, சென்னை – 600 044.

2. நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
பல்லவபுரம், சென்னை – 600 044.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
தாம்பரம், சென்னை – 600 045.

நகல்: இதழாசிரியர்,
இண்டியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்,
2–வது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை,
சென்னை – 600 085 (01.11.2018 நாளிட்ட நாளிதழ் செய்தி சம்பந்தமாக)

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி